1. கீழ்வருவனவற்றுள் பொருந்தாத சொல்லைக் கண்டறிக
   (A) பெண்கல்வி (B) கைம்பெண் (C) மறுமணம் (D) பொதுவுடைமை

2. கீழ்க்காண்பவற்றுள் சரியான தொடரைக் கண்டறிக.
   (A) என் வீட்டுத் தோட்டத்தில் மலர்கள் மணம் வீசின.
   (B) எண் வீட்டுத் தோட்டத்தில் மலர் மனம் வீசின.
   (C) என் வீட்டுத் தோட்டத்திள் மலர் மநம் வீசின.
   (D) எண் வீட்டுத் தோட்டத்திள் மழர்கள் மணம் வீசின.

3. பிழையில்லாத் தொடரைக் தேர்ந்தெடுக்கவும்.
   (A) பசு கன்றை ஈன்றன
   (B) மேகங்கள் சூழ்ந்து கொண்டது
   (C) கோவலன் சிலப்பு விற்கப் போனாள்
   (D) குழலி நடனம் ஆடினாள்

4. Intelligence – என்ற ஆங்கிலச் சொல்லுக்கு இணையான தமிழ்ச்சொல்லை எழுதுக
   (A) அறிவு (B) வலிமை (C) நுண்ணறிவு (D) திறன்

5. 'Confidence'– என்ற ஆங்கிலச் சொல்லுக்கு இணையான தமிழ்ச்சொல்லை எழுதுக.
   (A) வாக்கு (B) நம்பிக்கை (C) ஒப்பந்தம் (D) குறிக்கோள்

6. பெண் குழந்தைக் கொலைக்கான காரணங்களை ஆராய்ந்து எழுதியதே ________ புதினமாகும்.
   (A) கூட்டுக் குஞ்சுகள் (B) மண்ணகத்துப் பூந்துளிகள்
   (C) சேற்றில் மனிதர்கள் (D) குறிஞ்சித் தேன்

7. சாசனம், ஒவ்வொரு கல்லாய், கொம்பன் முதலிய சிறுகதைத் தொகுப்புகளை எழுதியவர் யார் ?
   (A) கந்தர்வன் (B) பூமணி
   (C) ராஜம் கிருஷ்ணன் (D) கு. அழகிரிசாமி

8. தன்னுடைய தமிழ் புதினத்திற்காக சாகித்திய அகாதெமி விருது பெற்ற முதல் பெண் எழுத்தாளர் யார் ?
   (A) வசந்தி தேவி (B) ராஜம் கிருஷ்ணன்
   (C) ரமணிச் சந்திரன் (D) மாலதி

9. உப்பளத் தொழிலாளர்களின் உவர்ப்பு வாழ்க்கையைக் கூறும் புதினம் எது ?
   (A) அலைவாய்க் கரையில்
   (B) வேருக்கு நீர்
   (C) கரிப்பு மணிகள்
   (D) சேற்றில் மனிதர்கள்

10. கலீல் கிப்ரான் _______ நாட்டைச் சேர்ந்தவர்.
   (A) இத்தாலி (B) அமெரிக்கா (C) லெபனான் (D) போலந்து

11. தமிழ்ப் பண்பாடு என்ற இதழினைத் தொடங்கியவர் யார் ?
   (A) பாரதிதாசன்
   (B) பாரதியார்
   (C) தனிநாயகம் அடிகள்
   (D) முடியரசன்

12. "பெற்ற தாயின் புகழும் நீ பிறந்த மண்ணின் புகழும்
   வற்றாமல் உன்னோடு வாழ்ந்திட வேண்டும்"– என்று கூறியவர் யார் ?
   (A) கவிஞர் கண்ணதாசன்
   (B) வாணிதாசன்
   (C) பாரதிதாசன்
   (D) பட்டுக்கோட்டை கல்யாண சுந்தரம்

13. பொருத்துக :

| | | | |
|---|---|---|---|
| 1) | முருங்கை | – i) | மடல் |
| 2) | நெல் | – ii) | புல் |
| 3) | அருகு | – iii) | தாள் |
| 4) | தாழை | – iv) | கீரை |

| | | | | |
|---|---|---|---|---|
| (A) | iv | ii | iii | i |
| (B) | iv | iii | ii | i |
| (C) | iv | i | ii | iii |
| (D) | i | iii | iv | ii |

14. குடும்ப நலத்திட்டம், கலப்புத் திருமணம் போன்றவற்றிற்கு வித்திட்டவர்
   (A) திலகர்
   (B) அண்ணல் அம்பேத்கர்
   (C) வ. உ. சி
   (D) பெரியார்

15. பானை _________ ஒரு சிறந்த கலையாகும்.
   (A) செய்தல்
   (B) வனைதல்
   (C) முடைதல்
   (D) சுடுதல்

16. கீழ்க்கண்டவற்றுள் எது குமரகுருபரர் பாடிய நூல் ?

(A) முத்துக்குமார சாமி பிள்ளைத்தமிழ்

(B) சேக்கிழார் பிள்ளைத் தமிழ்

(C) குலோத்துங்கன் பிள்ளைத் தமிழ்

(D) குலசேகரன் பிள்ளைத் தமிழ்

17. பகைவரை வெற்றிக் கொண்டவரைப் பாடும் இலக்கியம்

(A) கலம்பகம் (B) பரணி (C) பரிபாடல் (D) அந்தாதி

18. கூற்று 1 : தொல்காப்பியம் குறிப்பிடும் கருப்பொருள்களில் பறை இடம் பெறுகிறது.
கூற்று 2 : 'தப்பாட்ட இசை' குறித்துத் தம்பாடலில் பதிவு செய்தவர் அருணகிரிநாதர்.

(A) கூற்று 1 சரி (B) கூற்று 1 சரி 2 தவறு

(C) கூற்று 2 சரி (D) கூற்று 1, 2 சரி

19. உழைக்கும் மக்கள் தம் களைப்பை மறக்க உற்சாகத்துடன் பாடும் பாடலே _______ ஆகும்.

(A) கும்மி பாடல் (B) தாலாட்டுப் பாடல்

(C) நாட்டுப்புறப் பாடல் (D) விளையாட்டுப் பாடல்

20. காதால் கேட்டு வாய்மொழியாகவே வழங்கப்பட்டு வருவதால் இதனை _______ என்பர்.

(A) தாய்மொழி இலக்கியம் (B) வாய்மொழி இலக்கியம்

(C) நாட்டுப்புற இலக்கியம் (D) ஏட்டில் எழுதா இலக்கியம்

21. பொருத்துக :

1) உட்கார்ந்து உண்ண உதவுவது – i) பட்டுப்பாய்

2) உட்காரவும், உண்ணவும் உதவுவது – ii) பந்திப்பாய்

3) திருமணத்திற்கு உதவுவது – iii) தடுக்குப்பாய்

4) குழந்தைகளைப் படுக்க வைப்பது – iv) திண்ணைப்பாய்

(A) iv iii ii i

(B) i ii iii iv

(C) ii iv i iii

(D) iii i ii iv

22. பழங்காலத்தில் விலையைக் கணக்கிட அடிப்படையாக அமைந்தது

(A) புல் (B) நெல்

(C) உப்பு (D) மிளகு

23. வடதிசையிலிருந்து வீசும் காற்றை ________ என்று அழைப்பர்.

(A) சாரல் காற்று (B) தென்றல் காற்று

(C) ஊதைக் காற்று (D) வாடைக் காற்று

24. புகழ்பெற்ற மாமல்லபுரம் கடற்கரைக் கோவில் எந்த மாவட்டத்தில் உள்ளது ?

(A) செங்கல்பட்டு மாவட்டம்

(B) சென்னை மாவட்டம்

(C) காஞ்சிபுரம் மாவட்டம்

(D) விழுப்புரம் மாவட்டம்

25. சேரர்களின் நாடு ________ எனப்பட்டது.

(A) கொங்கு நாடு (B) சேர நாடு

(C) பாண்டியநாடு (D) குடநாடு

26. சங்க நூல்களில் பண்ணோடு பாடப்பட்ட நூல்

(A) புறநானூறு (B) பரிபாடல் (C) அகநானூறு (D) நற்றிணை

27. நெடுந்தொகை என்று அழைக்கப்படும் நூல்

(A) குறுந்தொகை (B) கலித்தொகை

(C) அகநானூறு (D) புறநானூறு

28. பத்துப்பாட்டு நூல்களுள் ஒன்று

(A) குறுந்தொகை (B) நற்றிணை

(C) மலைபடுகடாம் (D) பரிபாடல்

29. முல்லைப்பாட்டு ________ நூல்களுள் ஒன்று.

(A) எட்டுத்தொகை (B) பாட்டியல்

(C) பதினெண் கீழ்க்கணக்கு (D) பத்துப்பாட்டு

30. தமிழின் முதல் காப்பியம் ______ ஆகும்.

(A) மணிமேகலை
(B) மகாபாரதம்
(C) தொல்காப்பியம்
(D) சிலப்பதிகாரம்

31. திருப்பாவையைத் தழுவி 'கன்னிப்பாவை' என்னும் நூலை எழுதியவர் யார் ?

(A) வண்ணதாசன்
(B) வாணிதாசன்
(C) கண்ணதாசன்
(D) இறையரசன்

32. வாணிதாசனுக்குச் செவாலியர் விருது எந்த அரசால் வழங்கப்பட்டது ?

(A) பிரெஞ்சு அரசு
(B) இந்திய அரசு
(C) சீன அரசு
(D) ரஷ்ய அரசு

33. 'உழுபவருக்கே நில உரிமை இயக்கம்' தொடங்கி உழவருக்கு வேறுபணிகள் மூலம் வருமானம் வர ஏற்பாடு செய்த பெண்மணி

(A) சின்னப்பிள்ளை
(B) ராஜம் கிருஷ்ணன்
(C) கிருஷ்ணம்மாள் ஜெகந்நாதன்
(D) பாலசரஸ்வதி

34. இந்திய தேசிய இராணுவத்தில் உருவாக்கப்பட்ட பெண்கள் படையின் பெயர்

(A) இராஜாமணி
(B) ஜானகி
(C) ஜான்சிராணி
(D) லட்சுமி

35. 'களஞ்சியம்' என்ற பெயரில் மகளிர் குழு ஆரம்பித்தவர்

(A) ராஜம் கிருஷ்ணன்
(B) பாலசரஸ்வதி
(C) சின்னப்பிள்ளை
(D) கிருஷ்ணம்மாள் ஜெகந்நாதன்

36. "இன்னாத எவ்வுயிர்க்கும் செய்யாமை கல்வியோடு
ஒப்புரவு ஆற்ற அறிதல் அறிவுடைமை" இப்பாடல் வரிகளின் ஆசிரியர் யார் ?

(A) பெருவாயின் முள்ளியார்
(B) முள்ளியார்
(C) இடைக்கண் முள்ளியார்
(D) ஔவையார்

37. நம்பியாண்டார் நம்பியால் எழுதப்பட்ட அடியார்களின் சிறப்பைக் கூறுவதாக அமைந்துள்ள நூல்

(A) திருமந்திரம்
(B) திருத்தொண்டத் தொகை
(C) திருத்தொண்டர் திருவந்தாதி
(D) பெரிய புராணம்

38. சோழ அரசன் இரண்டாம் குலோத்துங்கன் அவையில் முதலமைச்சராக இருந்தவர்

(A) சேக்கிழார் (B) சுந்தரர்

(C) திருஞான சம்பந்தர் (D) வள்ளலார்

39. "எல்லாரும் இன்புற்று இருக்க நினைப்பதுவே
அல்லாமல் வேறொன்று அறியேன் பராபரமே"– இவ்வரிகளின் ஆசிரியர் யார் ?

(A) கலீல் கிப்ரான் (B) பாரதியார்

(C) தாயுமானவர் (D) கவிமணி தேசிக விநாயகம் பிள்ளை

40. குற்றாலக்குறவஞ்சி எந்த மலையின் பெருமையைக் கூறுகிறது ?

(A) மேருமலை (B) குற்றால மலை

(C) பொதிகை மலை (D) விந்திய மலை

41. "நன்றாற்றல்" என்னும் சொல்லைப் பிரித்து எழுதக் கிடைப்பது

(A) நன் + றாற்றல் (B) நன்று + ஆற்றல்

(C) நல்ல + ஆற்றல் (D) நன்றாற் + றல்

42. திரிந்து + அற்று என்பதனைச் சேர்த்தெழுதக் கிடைக்கும் சொல்

(A) திரிந்ததற்று (B) திரிந்தற்று (C) திரிந்துற்று (D) திரிவுற்று

43. "எளிது" என்னும் சொல்லின் எதிர்ச்சொல்

(A) அரிது (B) சிறிது (C) பெரிது (D) வறிது

44. "இளமை" என்னும் சொல்லின் எதிர்ச்சொல்

(A) முதுமை (B) புதுமை (C) தனிமை (D) இனிமை

45. பின்வருவனவற்றுள் பொருந்தாத சொல்லைக் கண்டறிக

(A) பாவேந்தர் (B) புரட்சிக்கவி (C) பகுத்தறிவு (D) சுப்புரத்தினம்

46. மங்கையராய்ப் பிறப்பதற்கே நல்ல மாதவம் செய்திடல் வேண்டுமம்மா ... என்று பாடியவர்

(A) கவிமணி (B) பாரதியார்

(C) பாரதிதாசன் (D) நாமக்கல் கவிஞர்

47. திருக்குறளுக்கு முதன்முதலில் உரை எழுதியவர் யார் ?

(A) மணக்குடவர்
(B) பரிமேலழகர்
(C) தருமர்
(D) பரிதி

48. "தொண்டு செய்து பழுத்த பழம்
தூய தாடி மார்பில் விழும்
மண்டைச் சுரப்பை உலகு தொழும்" – என்று தந்தைப் பெரியாரைப் பாடியவர்

(A) பாரதியார் (B) பாரதிதாசன் (C) வாணிதாசன் (D) கவிமணி

49. "அணுவைத் துளைத்து ஏழ்கடலைப் புகட்டிக்
குறுகத் தரித்த குறள்" - என்று பாராட்டியவர்

(A) தொல்காப்பியர்
(B) கபிலர்
(C) ஔவையார்
(D) பரணர்

50. செய்யுளுக்கே உரிய எதுகை, மோனை என்பவற்றை உரைநடைக்குள் கொண்டு வந்தவர்

(A) இரா.பி. சேது
(B) வைரமுத்து
(C) கல்கி
(D) சு. வெங்கடேசன்

51. கீழ்க் காண்பவற்றுள் சரியான தொடரைத் தேர்க

(A) வினைத்தொகையில் வல்லினம் மிகாது
(B) உம்மைத்தொகையில் வல்லினம் மிகும்
(C) உவமைத்தொகையில் வல்லினம் மிகாது
(D) உருவகத்தில் வல்லினம் மிகாது

52. பெயரெச்சம், எதிர்மறைச் பெயரெச்சம் ஆகியவற்றை அடுத்து

(A) மெல்லினம் மிகும்
(B) மெல்லினம் மிகாது
(C) வல்லினம் மிகும்
(D) வல்லினம் மிகாது

53. வல்லினம் மிகும் இடங்களில் சரியானதைத் தேர்க.

(A) எழுதியப்பாடல்
(B) இலைப் பறித்தேன்
(C) எனக்குத்தெரியும்
(D) எதுக் கிடைத்தது

54. ஆசாரக்கோவை – என்பதன் பொருள் யாது ?

(A) நல்ல ஒழுக்கங்களின் தொகுப்பு

(B) நல்ல பாடல்களின் தொகுப்பு

(C) நல்ல அறிவுரைகளின் தொகுப்பு

(D) நல்ல நூல்களின் தொகுப்பு

55. "காக்குவது ஏதெனில் விரதம் காக்கவே" – இத்தொடரில் விரதம் என்பதன் பொருள் என்ன ?

(A) நற்செயல்
(B) சினம்
(C) அறிவு
(D) நன்னெறி

56. தொல்காப்பியத்தில் அமைந்துள்ள இயல்கள்

(A) இருபத்தேழு
(B) ஒன்பது
(C) பதினெட்டு
(D) மூன்று

57. தொல்காப்பியத்தில் உள்ள அதிகாரங்களின் முறை வைப்பு

(A) சொல், பொருள், எழுத்து
(B) எழுத்து, சொல், பொருள்
(C) சொல், எழுத்து, பொருள்
(D) எழுத்து, பொருள், சொல்

58. "வண்மை யில்லையோர் வறுமை யின்மையாற்"– என்னும் வரிகள் இடம்பெறும் நூல்

(A) வளையாபதி
(B) கம்பராமாயணம்
(C) சிலப்பதிகாரம்
(D) மணிமேகலை

59. காற்றின் ஆற்றலை "வளி மிகின் வலி இல்லை" என்று கூறும் நூல் எது ?

(A) புறநானூறு (B) திருக்குறள் (C) திருமந்திரம் (D) சித்தர் பாடல்கள்

60. புலால் நாற்றம் உடையதாக அகநானூறு கூறுவது

(A) காற்று (B) நாவாய் (C) மணல் (D) கடல்

61. மரபுக்கவிதை எழுதுவதற்கான இலக்கணம் எது ?

(A) எழுத்து இலக்கணம்
(B) சொல் இலக்கணம்
(C) யாப்பு இலக்கணம்
(D) அணி இலக்கணம்

62. ஓர் அசையோ ஒன்றுக்கு மேற்பட்ட அசைகளோ சேர்ந்து அமைவது

(A) எழுத்து (B) தளை (C) சீர் (D) அடி

63. செய்யுளில் இரண்டாம் எழுத்து ஒன்றிவரத் தொடுப்பது

(A) முரண் (B) இயைபு (C) மோனை (D) எதுகை

64. பொருத்துக :

1) வெண்பா – i) அகவல் ஓசை

2) ஆசிரியப்பா – ii) தூங்கல் ஓசை

3) கலிப்பா – iii) செப்பல் ஓசை

4) வஞ்சிப்பா – iv) துள்ளல் ஓசை

(A) ii i iv iii

(B) iii i iv ii

(C) i iv iii ii

(D) iv ii iii i

65. அகவல் ஓசை உடைய 'பா' வகை

(A) வஞ்சிப்பா (B) கலிப்பா

(C) வெண்பா (D) ஆசிரியப்பா

66. கப்பல் கட்டுவதற்குப் பயன்படும் மர ஆணிகள் ________ என அழைக்கப்படும்.

(A) இறுதி (B) எழுதி

(C) தொகுதி (D) பகுதி

67. "சல்லி" என்பது மாட்டின் கழுத்தில் கட்டப்படுகின்ற ________ குறிக்கும்.

(A) பணமுடிப்பைக் (B) மணிகளைக்

(C) கயிற்றைக் (D) வளையத்தினைக்

68. கூற்று 1 : விலங்குகளின் தோலால் மூடப்பட்டுக் செய்யப்படும் கருவிகள் தோல் கருவிகள்.

கூற்று 2 : காற்றைப் பயன்படுத்தி இசைக்கப்படுபவை கஞ்சக் கருவிகள்.

(A) கூற்று 1 சரி 2 தவறு (B) கூற்று 1 தவறு 2 சரி

(C) கூற்று 1, 2 தவறு (D) கூற்று 1, 2 சரி

69. 'தேடிய செல்வத்தைச் செலவழிக்காமல்
புதைத்து வைப்பது மடமை'– என்று கூறியவர் யார் ?

(A) கபிலர்
(B) பரணர்
(C) காக்கைபாடினியார்
(D) ஔவையார்

70. ________என்னும் மாடு தழுவுதல் நிகழ்வைக் கண்ணுடையம்மன் பள்ளு பதிவு செய்துள்ளது.

(A) மாடு அணைதல்
(B) எருதுகட்டி
(C) சல்லிக்கட்டு
(D) வேலி மஞ்சுவிரட்டு

71. பொருத்துக :

1) நடந்து – i) முற்றெச்சம்
2) பேசிய – ii) குறிப்புப் பெயரெச்சம்
3) எடுத்தனன் உண்டான் – iii) பெயரெச்சம்
4) பெரிய – iv) வினையெச்சம்

(A) iii i iv ii
(B) iv iii i ii
(C) i iii ii iv
(D) ii iv iii i

72. ஒரே சொல் பலமுறை அடுக்கி வரும் தொடர் எவ்வகைத் தொடர் ?

(A) இரட்டைக்கிளவி
(B) உரிச்சொல் தொடர்
(C) எழுவாய்த் தொடர்
(D) அடுக்குத்தொடர்

73. 'துஞ்சினார்' எனும் சொல் எவ்வகைச் சொல் ?

(A) மங்கலம்
(B) குழூஉக் குறி
(C) இடக்கரடக்கல்
(D) மரூஉ

74. இலக்கண நெறி மாறாமல் முறையாக அமைந்த சொல்லை எவ்வாறு அழைப்பர் ?

(A) இலக்கணப் போலி

(B) மரூஉ

(C) இலக்கணமுடையது

(D) முன்பின்னாகத் தொக்க போலி

75. 'இந்த வேலையை முடிக்க ஒரு கை குறைகிறது' என்பது ________ ஆகும்.

(A) முதலாகுபெயர்

(B) சினையாகுபெயர்

(C) தொழிலாகுபெயர்

(D) பண்பாகுபெயர்

76. நேதாஜி அவர்கள் தேசிய இராணுவத்தின் பொறுப்பை ஏற்க கப்பலில் பயணம் செய்து எந்த இடத்திலிருந்து எந்த இடத்திற்கு வந்தடைந்தார் ?

(A) மலேயாவிலிருந்து பர்மா

(B) மலேயாவிலிருந்து ஜப்பான்

(C) சிங்கப்பூரிலிருந்து ஜெர்மனி

(D) ஜெர்மனியிலிருந்து சிங்கப்பூர்

77. திராவிட மகாஜன சங்கத்தைத் தோற்றுவித்தவர்

(A) அம்பேத்கர்

(B) அயோத்திதாசர்

(C) பெரியார்

(D) காளிதாசர்

78. கல்வியறிவு இல்லாத பெண்கள் ________ போன்றவர்கள் என்றார் பாரதிதாசன்.

(A) பண்படாத நிலம்

(B) திருத்திய கழனி

(C) பண்பட்ட நிலம்

(D) உழுநிலம்

79. கீழ்வருவனவற்றுள் பாவலரேறு பெருஞ்சித்திரனாரின் படைப்புகளுள் ஒன்று எது ?

(A) கொய்யாக்கனி

(B) தைப்பாவை

(C) தண்டமிழ்க்கனி

(D) மாங்கனி

80. கீழ்க்காணும் நூல்களுள் கவிஞர் வாணிதாசன் அவர்கள் எழுதிய நூல் எது ?

(A) கொடிமுல்லை

(B) கண்ணன் பாட்டு

(C) இருண்ட வீடு

(D) அழகின் சிரிப்பு

81. வினை என்னும் சொல்லுக்குரிய பொருள் யாது ?

(A) அயல் (B) செயல் (C) வயல் (D) கயல்

82. எட்டாம் வேற்றுமையை ________ வேற்றுமை என்று அழைப்பர்.

(A) எழுவாய் (B) செயப்படுபொருள்

(C) விளி (D) பயனிலை

83. வட்டம், செம்மை, தீமை இவை எவ்வகைப் பெயர்கள் ?

(A) சினைப்பெயர் (B) பொருட்பெயர்

(C) காலப்பெயர் (D) பண்புப்பெயர்

84. கூற்று 1 : ஏவல் வினைமுற்று முன்னிலையில் வரும்.

கூற்று 2 : ஏவல் வினைமுற்று விகுதி பெற்றே வரும்.

(A) கூற்று 2 மட்டும் சரி

(B) கூற்று 1 சரி கூற்று 2 தவறு

(C) கூற்று 1 தவறு கூற்று 2 சரி

(D) கூற்று 1, 2 சரி

85. பின்வரும் வினைமுற்றுகளில் வேர்ச்சொல்லுடன் சரியாக இணைந்துள்ள ஒன்றைத் தேர்க.

(A) பேசினாள் – பேசி (B) தருகின்றனர் – தரு

(C) நடக்கிறது – நட (D) வருக – வரு

86. பொருத்துக :

1) கலாம் – i) மன்றம்

2) குழீஇ – ii) குற்றம்

3) தோம் – iii) போர்

4) கோட்டி – iv) ஒன்றுகூடி

(A) iv i iii ii

(B) ii iii iv i

(C) iii i ii iv

(D) iii iv ii i

87. கீழ்க்கண்ட நூல்களில் எது இளங்கோவடிகள் இயற்றியது ?

(A) தொல்காப்பியம்
(B) கம்பராமாயணம்
(C) சிலப்பதிகாரம்
(D) மணிமேகலை

88. நீலகேசி_______ காப்பியங்களுள் ஒன்று.

(A) ஐம்பெருங்காப்பியங்களுள்
(B) பௌத்த சமயக் காப்பியங்களுள்
(C) ஐஞ்சிறு காப்பியங்களுள்
(D) வைணவ சமயக் காப்பியங்களுள்

89. உடல் நோய்க்கு _____ தேவை என அறிவியல் ஆத்திசூடி கூறுகிறது.

(A) இனிப்பு (B) ஔடதம் (C) உணவு (D) உடை

90. "சிறுபஞ்சமூலம்" என்ற நூலின் ஆசிரியர் யார் ?

(A) காரியாசான்
(B) ஔவையார்
(C) பெருவாயின் முள்ளியார்
(D) பரணர்

91. கூற்று 1 : ஆய்த எழுத்து சொல்லின் முதலில் வராது.

கூற்று 2 : ஆய்த எழுத்து சொல்லின் இறுதியில் வராது.

(A) கூற்று 1 மட்டும் சரி
(B) கூற்று 2 மட்டும் சரி
(C) கூற்று 1 சரி கூற்று 2 தவறு
(D) கூற்று 1, 2 சரி

92. ஔ என்ற நெட்டெழுத்துக்கு இன எழுத்தாக வருவது

(A) இ (B) ஒ (C) எ (D) உ

93. தவறானது எது கண்டறிக ?

1) குறில் எழுத்தை ஒலிக்கும் கால அளவு – ½ மாத்திரை
2) நெடில் எழுத்தை ஒலிக்கும் கால அளவு – 2 மாத்திரை
3) ஆய்த எழுத்தை ஒலிக்கும் கால அளவு – 1 மாத்திரை
4) மெய் எழுத்தை ஒலிக்கும் கால அளவு – ½ மாத்திரை

(A) 1, 3 (B) 2, 4 (C) 1, 2 (D) 3, 4

94. அ, இ, ஐ, ஒ -ஆகிய நான்கில் நீண்டு ஒலிக்கும் எழுத்தைக் கண்டறிக

(A) அ (B) இ (C) ஐ (D) ஒ

95. ஒலி வடிவமாக எழுப்பப்படுவதும் வரி வடிவமாக எழுதப்படுவதும் ________ எனப்படுகிறது.

(A) சொல் (B) எழுத்து (C) யாப்பு (D) பொருள்

96. "எப்பொருள் எத்தன்மைத் தாயினும் அப்பொருள் ______ காண்ப தறிவு". விடுபட்ட சொல்லை எழுதுக.

(A) மெய்ப்பொருள் (B) வன்பொருள்

(C) செய்பொருள் (D) உயர்பொருள்

97. கூற்று 1 : திருவள்ளுவர் இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முற்பட்டவர்.
கூற்று 2 : உலகப்பொது மறை எனப் போற்றப்படும் நூல் திருவாசகம்.

(A) கூற்று 1 சரி 2 தவறு (B) கூற்று 1, 2 சரி

(C) கூற்று 1 தவறு 2 சரி (D) கூற்று 1, 2 தவறு

98. திருக்குறளின் பெருமையை விளக்கும் நூல் எது ?

(A) சொல்மணிமாலை (B) தெய்வமணிமாலை

(C) சொல்மாலை (D) திருவள்ளுவமாலை

99. "தத்தம் கருமமே கட்டளைக் கல்"– எதற்கு என்று வள்ளுவர் கூறுகிறார் ?

(A) எண்ணிற்கும், எழுத்திற்கும் (B) பெருமைக்கும், சிறுமைக்கும்

(C) சீருக்கும், சிறப்புக்கும் (D) தானத்திற்கும், தவத்திற்கும்

100. பொருத்துக.

| | | | |
|---|---|---|---|
| 1) | பயனில்லாத களர் நிலம் | – i) | எரிமுன்னர் வைத்தூறு |
| 2) | புகழாலும் பழியாலும் அறியப்படுவது | – ii) | கல்லாதவர் |
| 3) | புலிதோல் போர்த்திய பசு | – iii) | நடுவுநிலைமை |
| 4) | வருமுன்னர் காவாதான் வாழ்க்கை | – iv) | மனதை அடக்க இயலாதவர் |

(A) iii ii i iv

(B) ii iii iv i

(C) i iv ii iii

(D) iv ii iii i